பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை 14.09.2021 கதிர் 177

## நகர சபை உப தலைவர் கொரோனாவால் சாவு!

கேகாலை நகர சபையின் உப தலைவர் லலித் ஜெயசாந்த (வயது - 50), கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

இவர் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று மரணமடைந்துள்ளார்.

# ஐ.நா. ஆணையரின் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்தது இலங்கை அரசு

## இன்றைய அமர்வில் பீரிஸ் பதிலளித்துக் காட்டமான உரை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார், நேற்று 48 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப அமர்வில், இலங்கைக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான 2

## ஊரடங்குச் சட்டத்தை மேலும் நீடிக்கும் சாத்தியம் இல்லை

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு



நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நான்கு வாரங்களாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அடுத்த வாரம் முதல் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட 2

## ஐ.நாவை ஏமாற்றலாம் என இனியும் கனவு காணாதீர்!

### இலங்கை அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை



பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு இனியும் எண்ணக்கூடாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை அரசை சர்வதேசக் கண்காணிப்புப் பொறிக்குள் சிக்கவைத்துக் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரின் வாய்மூல அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளையும், ஐ.நா. 2

## தடுப்பூசி அட்டை இருந்தால் மட்டுமே இனி பஸ்களில் பயணிக்க முடியும்!

### புதிய சட்டம் கொண்டுவர அரசு தீர்மானம்

கொரோனாத் தடுப்பூசி அட்டை இன்றி பஸ்களில் பயணம் செய்வதற்குத் தடை விதிக்கும் வகையிலான புதிய சட்டத்தை மேல்மாகாணத்தில் அறிமுகம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்திலிருந்து இந்தப் புதிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது.

இந்தச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துவதற்கும், விதிமுறைகளை மீறுவோரை அடையாளம் காண்பதற்காக பரிசோதகர் 2

## வைத்தியசாலையில் குண்டு; முக்கிய பிரமுகர்கள் இலக்கா?

### கொழும்பில் இன்று பரபரப்பு; பொலிஸ் தீவிர விசாரணை



கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் முதலாம் மாடியில் உள்ள கழிப்பறையில் இருந்து கைக்குண்டு ஒன்று இன்று 2

## யாழ். பல்கலை பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் 7,8,9 இல்

### சுகாதாரத்துறை அனுமதி தராவிட்டால் நிகழ்நிலையில் நடத்துவதற்கு ஏற்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07ஆம், 08ஆம், 09ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின், சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனை நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், 2

## இன, மத பேதமின்றி அனைவரும் தொற்றிலிருந்து மீள வேண்டும்!

### இதுவே எனது பிரார்த்தனை என்று யாழில் ஞானசார தேரர் தெரிவிப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பாணத்தில் சிறப்பு பூஜை வழிபாட்டை மேற்கொண்டோம்.

-இவ்வாறு பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாடு கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட வேண்டி இன்று நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் 2

## யாழ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழாவை நடாத்தி மாணவர்களுக்குப் பதக்கங்களைப் பெற்றோர் முன்னிலையில் அணிவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு இன்று காலை, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது பட்டமளிக்கு விழாக் குழுவின் தலைவரும் கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே. சுதாகர் மேற்கொண்ட ஊடக விபரிப்பின்போதே இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

ஊடகச் சந்திப்பின்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும் கலைப்பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், பட்டமளிப்பு விழா நிகழ்வு முகாமைத்துவத் தலைவரும் தொழில்நுட்ப பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஊரடங்குச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பூசி வழங்கல் மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## ஐ.நாவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரின் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## ஐ.நா. ஆணையாளரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழிவை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கைக்கு இலங்கை அரசின் சார்பில் இன்று பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீர்மானம் 46/1ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை நாங்கள் நிராகரிக்கும் அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுகின்றன. தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது என்பதுடன் அது அரசியல் மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும் - என்றார்.

## தடுப்பூசி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை நியமிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேல்மாகாணத்தில் சுமார் 6 ஆயிரத்து 200 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன எனவும், குறித்த பஸ்களில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொண்டிருப்பது கட்டாயம் எனவும் குறித்த போக்குவரத்து அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும், பஸ்களில் செல்லும் பயணிகள் அனைவரும் தடுப்பூசி அட்டையை உடன் வைத்திருக்க வேண்டும் எனவும், இவ்வாறு பயணிகள் அனைவரிடமும் தடுப்பூசி அட்டை இருக்கின்றதா என்பது தொடர்பில் சோதனைகளை மேற்கொள்ள வேண்டியது பஸ் நடத்துநரின் கடமை எனவும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

## இன, மத......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் ஒரு விசேட பூஜை வழிபாட்டில் கலந்துகொள்வதற்காக வந்திருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறப்பான விஷ்ணு ஆலயத்தைத் தெரிவுசெய்து நயினாதீவு விகாராதிபதி மற்றும் யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதியுடன் இணைந்து வந்திருக்கின்றேன்

நாங்கள் ஒரு எதிர்பார்ப்போடு இங்கு வந்திருக்கின்றோம். தற்போதைய நிலைமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிலர் நோயால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகின்றார்கள். அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராக இருக்கட்டும். எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சிலர் ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் உள்ளார்கள். அதேபோல் சிலருக்கு வேலை இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது. அத்தோடு இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகின்றார்கள். எந்த இனத்தவராக இருந்தாலும் பிரச்சினையில்லை. அனைத்து இன மக்களும் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறையைப் போல் இந்து மதத்தில் உள்ள ஆகம விதிமுறையை இணைத்து இந்தத் தொற்றில் இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது பௌத்த, இந்து, இஸ்லாம் என்ற பேதத்தை மறந்து அனைவரும் இணைந்து இந்தக் கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இலங்கையில் நான்கு பிரதான விஷ்ணு ஆலயங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்றுதான் இங்கு யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள். விஷ்ணு ஆலயத்தில் இந்த விசேட பூஜை வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம். கடவுளிடம் மன்றாடி இந்த விசேட பூஜை வழிபாடு மேற்கொண்டுள்ளோம்.

ஏனைய இடங்களிலும் இந்தப் பூஜை வழிபாடுகள் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு என்னுடன் இணைந்து ஏனைய விகாராதிபதிகளும் இந்த நிகழ்வில் இணைந்திருந்தார்கள்.

இந்தக் கொரோனா நோயின் தாக்கம் மானதுகல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

அதிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒரு முயற்சியாகவே இந்த விசேட பூஜை வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளோம். அதாவது உலகத்தில் உள்ள மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட வேண்டும் மக்கள் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்று வேண்டியே பூஜை வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளோம்.

இன, மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் நோயிலிருந்து விடுபடவேண்டியே இன்று இந்த வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம். குறித்த வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார்.

## வைத்தியசாலையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, குறித்த வைத்தியசாலையினதும், அதனை அண்டிய பகுதிகளினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் இந்த வைத்தியசாலைக்கு வருவதால் அவர்கள் எவரையாவது இலக்கு வைத்து இந்தக் கைக்குண்டு கொண்டுவரப்பட்டதா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அது விரதம்: இது பட்டினி!

இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முதன்முதலில் நாடாளுமன்றத்துக்கு வந்த 1970 – காலப்பகுதியிலும், அவர் இடம் பெற்றிருந்த ஐக்கிய முன்னணி அரசினாலும் இப்போது போல பொருள்கள் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மக்கள் சீனிக்கும், மாவுக்கும் பாணுக்கும், அரிசிக்கும் மற்றைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் வரிசையில் காத்து நிற்க வேண்டிய நிலைமைக்கு அப்போதும் தள்ளப்பட்டனர். பங்கீட்டு அட்டைக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம், கூப்பன் அரிசி என்றெல்லாம் மக்கள் அன்றாடம் அளந்து சாப்பிடும் நிலைமை இருந்தது. அப்போது நாட்டை ஆட்டிப் படைத்தது அரிசி அரசியலே.

பொருளாதாரம் ஒன்றைப் பேணியமை மூலம், நாட்டை வளப்படுத்துவதற்கான முயற்சி அது. அதனை கியூ யுகம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கிண்டல் அடித்தாலும், உள்நாட்டு உற்பத்தியை – விவசாய வளர்ச்சியை –கிராமிய பொருளாதார மேம்பாட்டை – கட்டியெழுப்பிய ஓர் உயரிய முயற்சி அது.

அதனை, அந்த நெருக்கடி காலத்தை, இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையுடன் சிலர் ஒப்பிடுகின்றனர்.

அது வேறு, இது வேறு என்பதுதான் உண்மை. அது அந்நிய செலாவணி இல்லாமல், வேறு வழியின்றி உருவான நெருக்கடி அல்ல. உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி மேம்படுத்த வேண்டும், பிற நாடுகளிடம் கையேந்தும் திறந்த பொருளாதாரத்தை அடியோடு துறக்க வேண்டும் என்ற மேம்பட்ட பல இலக்குகளை எட்டுவதற்காக நாடும் மக்களும் சுயமாகச் செய்த யாகம் – தியாகம் – அது.

சொந்தக்காலில் நாட்டை நிலைநிறுத்துவதற்காக, அந்நிய யாசகத்திற்கு அடியோடு தடை விதித்தது இடதுசாரிகளையும் கணிசமாக அன்றைய ஐக்கிய முன்னணி அரசு.

வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு வசதி, வழி, வாய்ப்பு இருந்தும், உள்ளூர் உற்பத்திகளை ஒரேயடியாக ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக, அப்போதைய அரசு வெளிநாட்டு இறக்குமதிகள் பலவற்றுக்கும் தடை விதித்தது.

மிளகாய், வெங்காயம், அரிசிக்குத் தடை வந்தபோதும் அந்த முடிவை சரியாக பயன்படுத்திக்கொண்ட தரப்பு நமது வடக்கு விவசாயிகள்தான். படித்த இளைஞர்கள் கூடமண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு விசுவமடுவையும், பிற தோட்ட நிலங்களையும் நாடினர். கடுமையாக உழைத்தனர். உழைப்புக்கேற்ற உயர்வு மிளகாய், வெங்காயம், அரிசி சாகுபடி செய்து தமிழர்கள் அடி மட்டத்திலிருந்து எழுந்து பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். அத்தோடு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் மாறினர். அன்றைய விவசாயப் புரட்சியை – தமிழ் மக்களின் பொருளாதார எழுச்சியை –யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அடுத்துப் பின்னர் வந்த ஜனாதிபதி தேர்தலில், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைப் புறக்கணித்து சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு அள்ளி வாக்களித்து வடக்கு விவசாயிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இன்றைய அரசோ வருமானம் இல்லாமல், அந்நிய செலாவணி கரைந்து கையிருப்பு முடிவுற்ற நிலையில், இறக்குமதிக்கு வக்கற்ற கட்டத்தில், திறந்த பொருளாதாரத்தோடு, வழியின்றிக் கைவிரித்து, தடுமாறுகிறது.

அது, நம்மை உயர்த்துவதாக நாமே மேற்கொண்ட விரதம். இது, வசதி வாய்ப்பின்றி, வழியின்றி பட்டினி கிடக்கும் அவலம். இரண்டும் ஒன்றல்ல என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.

# ஊரடங்குச் சட்டம் எப்போது தளர்த்தப்படும்? கொரோனா செயலணிக் கூட்டத்தில் முடிவு

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு எப்போது நீக்கப்படும் என்பது தொடர்பில் கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய ஊடகவியலாளர் மாநாட்டின்போது, நாட்டில் தற்போது உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு எப்போது தளர்த்தப்படும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை அமுலில் இருக்கும். அதில் மாற்றம் இருப்பின் அது குறித்து அறிவிக்கப்படும். தனிமைப்படுத்தல் ஊரடங்கால் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கை குறைவடைந்துள்ளன - என்றார்.

# சரியான திட்டமிடலுடன் தொற்றை எதிர்கொள்க!

## மயந்த திஸாநாயக்க எம்.பி. வலியுறுத்து

அரசு, சரியான திட்டமிடலுடன் இந்தக் கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தரவுகளை அழிப்பதன் பின்னணியில் குழுவொன்று உள்ளது. தரவுகளை அழிப்பதன் இலாபத்தை அரசுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு குழுவினர் மட்டுமே பெற்றுக்கொள்கின்றனர். எனவே, இது தொடர்பில் அரசு தேடிப்பார்க்க வேண்டும்.

அரசு அவ்வாறு ஒன்றும் இல்லை எம்முடன் ஒப்பந்தம் செய்துகொண்ட குழுவினர் இல்லை என்று கூறினால், எம்மிடம் அன்டிஜன், பி.சி.ஆர். முதலாளிகள் இல்லை என்று கூறினால், அரிசி விற்பனை மாப்பியாக்கள் இல்லை என்று கூறினால், குழுவொன்றை நியமித்து இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் வழமைபோன்று காலத்துடன் இவ்விடயத்தை மக்கள் மறந்துவிடுவார்கள்.

இவ்வாறு மறந்துபோவதனூடாக அரசு ஒரு புதிய விடயத்துக்குச் சென்றுவிடும். வழமைபோன்று ஒப்பந்த வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்.

நாடு உண்மையில் வங்குரோத்து நிலைமையை அடைந்திருந்தால் அரசு தற்போதைய நிலையிலாவது வெளிப்படைத்தன்மையுடன் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் இன்னும் தாமதநிலை ஏற்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைச் சரியாக முகங்கொடுப்பதற்கு இன்னும் காலதாமதம் ஏற்படவில்லை.

அரசு சரியான திட்டமிடலுடன் இந்தக் கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்ள வேண்டும் என்பதுடன் மக்களின் நிலைமை தொடர்பில் கருத்தில்கொண்டு செயற்படவும் வேண்டும். மக்களின் நிலைமை குறித்து அரசு சிந்திக்க வேண்டும். அத்துடன் மக்கள் சந்தோசத்துடன் வாழ்வதற்கான சூழலை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றார்.

# கொரோனாவைக் காட்டி தொழிலாளர் வஞ்சிப்பு

## தொழில் அமைச்சுக்குக் கடிதம்

கொரோனாவைக் காரணம் காட்டி தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகிகளால் வஞ்சிக்கப்படுவதற்கு எதிராக தொழில் திணைக்களமும் தொழில் அமைச்சும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொழிற் திணைக்கள செயலாளர் நாயகத்துக்கும் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவரது கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இன்று கொரோனாவைக் காரணம் காட்டி தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களை பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக்கி வருகின்றனர். மேலும், தோட்டக்கம்பனிகள் தன்னிச்சையாகக் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த பல்வேறு சலுகைகளை இன்று தொழிலாளர்கள் இழந்துள்ளனர்.

கூட்டு ஒப்பந்தம் ஒன்று நடைமுறையில் இல்லாத காரணத்தால் தோட்ட நிர்வாகிகள் தீர்மானிக்கும் அனைத்து முடிவுகளுக்கும் தொழிலாளர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற சர்வாதிகார ரீதியில் செயற்படுகின்றனர்.

தொழிலாளர்களுடைய அதிகரித்த நாள் சம்பளத்தை குறைக்கும் நோக்கோடு கூடுதலான அளவு கொழுந்து இறப்பர் பால் கொண்டு வரவேண்டும் என உத்தரவிடுகின்றனர்.

அவ்வாறு தோட்ட நிர்வாகிகள் தீர்மானிக்கும் கொழுந்து இறப்பர் பால் அளவை தொழிலாளர்களால் கொண்டு வர முடியாவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றனர்.

சம்பளத்தை கிலோவுக்கு 40 என்ற அடிப்படையில் வழங்குதல், வேலை நாள்களைக் குறைத்தல் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை, வேலையிலிருந்து இடைநிறுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இவ்விடயத்தில் கம்பனி தோட்டத் துரைமார்கள் மாத்திரமன்றி அரச தோட்டங்களிலும் இவ்வாறான அத்துமீறிய செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

இவை சம்பந்தமாக நாம் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக் கூட்டங்களிலும் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

இதற்கு ஒரே வழி மீண்டும் கூட்டு ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டு வருவதேயாகும் - என்றுள்ளது.

# ஆறு ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்குக் கிரேக்கம் திட்டம்



கிழக்கு மத்திய தரைக்கடலில் துருக்கியுடன் பதற்றம் நீடித்து வருவதால், மேலும் ஆறு ரஃபேல் போர் விமானங்களை வாங்க கிரேக்கம் திட்டமிட்டுள்ளது. கிரேக்கப் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடகிஸ் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், கிரேக்க ஊடக அறிக்கையின்படி, எதென்ஸ் நான்கு புதிய போர் கப்பல்களை வாங்குவதற்கான பேச்சில் ஈடுபட்டுள்ளது.

ஜனவரியில், கிரேக்கம் 18 விமானங்களுக்கு முன்பதிவு செய்தது. அவற்றில் 12 விமானங்கள் 250 கோடி யூரோ ஒப்பந்தத்தில் கிரேக்கத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது.

முன்னர் ஒப்புக்கொள்ளப்பட்ட 18 ரஃபேல் ஜெட் விமானங்களில், 12 தற்போது பிரான்ஸில் சேவையில் உள்ளன மற்றும் ஆறு புதிய விமானங்கள் டசால்ட் ஏவியேன் மூலம் உருவாக்கப்படும்.

ஆண்டு நடுப்பகுதியில் தொடங்கி இரண்டு ஆண்டுகளில் விமானங்களை தயார் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

டசால்ட் ஏவியேன் தயாரித்த போர் விமானங்களை வாங்கிய முதல் ஐரோப்பிய நாடு கிரேக்கம் ஆகும்.

மே மாதத்தில், குரோஷியா ரஃபேல்ஸை வாங்கிய இரண்டாவது ஐரோப்பிய நாடாக மாறியது. முன்பு பயன்படுத்தப்பட்ட 12 விமானங்களைத் அந்த நாடு வாங்கியது.

கட்டார், எகிப்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் டசால்ட்டின் மிகப்பெரிய ரஃபேல் வாடிக்கையாளர்கள் ஆகும்.

அண்டை நாடான துருக்கியுடன் பதற்றம் அதிகரிக்கும் நேரத்தில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தனது ஆயுதப் படைகளை நவீனப்படுத்துவதற்காக 1,150 கோடி யூரோக்களை கிரேக்கம் ஒதுக்கியுள்ளது.

கிரேக்கமும் துருக்கியும் கடந்த ஆண்டு கிழக்கு மத்திய தரைக்கடலில் எரிவாயு ஆய்வு தொடர்பாக ஏற்பட்ட மோதலில் இராணுவமோதலைநெருங்கின

இரண்டு நேட்டோ உறுப்பினர்களுக்கிடையேயான உறவு, கடந்த ஆண்டு அடிக்கடி மோசமடைந்தது, கடல் எல்லைகள் மற்றும் எரிசக்தி உரிமைகள் தொடர்பான சர்ச்சையில் போர்க்கப்பல்கள் கிழக்கு மத்தியதரைக்கடலில் எதிர்கொண்டன.

# பிரித்தானிய பிரதமரின் தாயார் காலமானார்



பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனின் தாயார் சார்லோட் ஜோன்ஸன் வால், தனது 79 ஆவது வயதில் காலமானார்.

தொழில்முறை ஓவியரான சார்லோட் ஜோன்ஸன் வால், மேற்கு லண்டனில் உள்ள செயின்ட் மேரி மருத்துவமனையில் திடீர் மற்றும் அமைதியான முறையில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் கட்சித் தலைவர் சர் கெய்ர்ஸ்டார்மர், 'பிரதமரின் தாயாரின் இழப்பை அறிந்து மிகவும் வருந்துகிறேன். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது இரங்கல்கள்' என தெரிவித்துள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் அமண்டா மில்லிங், 'பொரிஸ் ஜோன்ஸன் மற்றும் அவரது குடும்பத்தினரை நினைத்துக்கொண்டிருக்கின்றேன். எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உங்களுடன் உள்ளன' என்று கூறினார்.

பிரதமரின் நண்பரான டோரி எம்.பி., கானர் பர்ன்ஸ், 'பொரிஸ் ஜோன்ஸனின் அம்மாவின் மரணத்தைக் கேட்டு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எண்ணங்களும் பிரார்த்தனைகளும் அவருடன் உள்ளன' என குறிப்பிட்டுள்ளார்.

1970களில் ஐரோப்பிய மனித உரிமைகளுக்கான ஆணையத்தின் தலைவராக இருந்த ஜோன்ஸன் வால், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன்பு 1963இல் ஸ்டான்லி ஜோன்ஸனை மணந்தார்.

இந்த ஜோடிக்கு நான்கு குழந்தைகள் உள்ளன. பொரிஸ், பத்திரிகையாளர் ரேச்சல், முன்னாள் அமைச்சர் ஜோ மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் லியோ.

இந்தநிலையில், 1979ஆம் ஆண்டு ஸ்டான்லி ஜோன்ஸனை, விவாகரத்து செய்தனர். 1988ஆம் ஆண்டில், அவர் அமெரிக்க பேராசிரியர் நிக்கோலஸ் வாலை மணந்தார் மற்றும் நியூயோர்க்கிற்கு சென்றார்.

அங்கு அவர் நகரக் காட்சிகளை வரைவதற்குத் தொடங்கினார். நிக்கோலஸின் மரணத்தைத் தொடர்ந்து 1996இல் அவர் மீண்டும் லண்டனுக்குத் திரும்பினார்.

40 வயதில், அவளுக்கு பார்கின்சன் நோய் இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால் அவர் ஓவியம் வரைவதைத் தொடர்ந்தார்.



# ஆப்கானில் நெருக்கடி; நிதி கோரும் ஐ.நா.!

ஆப்கானிஸ்தானில் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியில் சிக்கியவர்களுக்கு உதவ, 100 கோடி அமெரிக்க டொலர் நிதி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஆலோசனைக் கூட்டத்தில், தலிபான் ஆளுகையில் உள்ள ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான உதவி வழங்க சர்வதேச சமூகத்தை ஐக்கிய நாடுகள் சபை முறைப்படி கோரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானியர்களுக்கு உணவு, மருத்துவம், சுகாதார வசதிகள், சுத்தமான குடிநீர் போன்றவை அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நாடு மிகவும் மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கிறது. நீடித்த மோதல், கடுமையான வறட்சி மற்றும் கொவிட்-19 பாதிப்பை அந்நாடு எதிர்கொண்டு வருகிறது.

அங்கு வாழும் மக்களில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு ஏற்கெனவே உதவி தேவைப்பட்டிருந்தது. ஆப்கானிஸ்தானில் சமீபத்திய முன்னேற்றங்கள் அங்கு ஏற்கெனவே நிலவி வந்த பாதிப்பை அதிகரித்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் இஸ்லாமியவாத போராளிகள் ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை மீட்பதற்கு முன்பே, உள்நாட்டு மோதல் காரணமாக இந்த ஆண்டு 5,50,000க்கும் அதிகமான மக்கள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். அதாவது, அந்நாட்டில் தற்போது 35 லட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஸ்பெயினில் காட்டுத் தீ; 2,000 பேர் வெளியேற்றம்

தெற்கு ஸ்பெயினின் பிராந்தியமான அண்டலூசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக சுமார் 2,000 பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

கோஸ்டா டெல் சோலில் உள்ள புகழ்பெற்ற ரிசார்ட் நகரமான எஸ்டெபோனாவுக்கு மேலே கடந்த புதன்கிழமை தொடங்கிய தீ விபத்தில் ஒரு அவசர ஊழியர் உயிரிழந்துள்ளார்.

இதனிடையே கட்டுக்கடங்காமல் பற்றி எரியும் காட்டுத்தீயை கட்டுப்படுத்த மலைப் பகுதியில் தீயணைப்பு வீரர்களுக்கு உதவுவதற்காக ஸ்பெயின் அரசாங்கம் ஒரு இராணுவப் பிரிவை நியமித்துள்ளது கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் ஆறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர். மற்றஐந்து சமூகங்களில் வசிப்பவர்கள் வெள்ளிக்கிழமை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும்படி கூறப்பட்டனர். தீவிபத்தில் 7,400 ஹெக்டேயர் எரிக்கப்பட்டதாக ஸ்பெயின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த கோடையில் ஐரோப்பா பல காட்டுத்தீ களைக் கண்டது.

தொழில்துறை சகாப்தம் தொடங்கியதிலிருந்து உலகம் ஏற்கனவே சுமார் 1.2 செல்சியஸ் வெப்பமடைந்துள்ளது.

# பிரான்ஸுடனான தடுப்பூசி ஒப்பந்தத்தை ரத்து செய்தது பிரித்தானியா

பிரான்ஸ் கொவிட் தடுப்பூசி நிறுவனமான வல்னேவாவுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த கொவிட் தடுப்பூசி ஒப்பந்தத்தை, பிரித்தானியா ரத்து செய்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் அதன் கோரிக்கையை 4 கோடியாக அதிகரித்த பிறகு, பிரித்தானியா சுமார் 10 கோடி டோஸை முன்பதிவு செய்திருந்தது.

ஆனால், வல்னேவா நிறுவனம், ஒப்பந்தத்தை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து பிரித்தானியா அரசாங்கம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. ஆனால், இந்த குற்றச்சாட்டை வல்னேவா நிறுவனம், கடுமையாக மறுக்கிறது. ஸ்கொட்லாந்தின் மேற்கு லோத்தியனில் உள்ள ஒரு தளத்தில் உற்பத்தி தொடங்கப்பட்டிருந்தாலும், வால் னேவாவின் தடுப்பூசி இன்னும் சோதனை கட்டத்திலேயே உள்ளது. லிவிங்ஸ்டனில் உள்ள ஆலையில் சுமார் 100 விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரிகின்றனர் என கருதப்படுகிறது. நிறுவனம் அதன் மூன்றாம் கட்ட சோதனைகளின் முடிவுகள் இந்த ஆண்டின் இறுதியில் வெளிவருமென தெரிவித்துள்ளது.





# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு ஜனநாயகத்தின் மீதான வடு

தமிழகத்தில் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடவேண்டும் எனக்கோரி போராடிய மக்கள் மீது கடந்த 2018 ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தியிருந்த இந்திய தேசிய மனித உரிமை ஆணையம், வழக்கை தனது விசாரணைகளின் அடிப்படையில் முடித்துவைத்திருந்தது. அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் சமூக ஆர்வலர்கள் சிலர் தொடர்ந்த வழக்கில், 'விசாரணையை மனிதஉரிமைஆணையம் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும். முறையாக விசாரணை நடக்கிறதா, என்பதை நீதிமன்றம்கண்காணிக்க வேண்டும்' என்று கோரிக்கை முன்வைத்திருந்தார்கள்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, இதுதொடர்பான அறிக்கையொன்றை இந்தியத் தேசிய மனித உரிமை ஆணையம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையின் நகல்களை மத்திய அரசு, மாநில அரசு மற்றும் மனுதாரருக்கு வழங்கவேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். மேலும் அந்த நகலாய்வை இணைய வழியில் பரப்பக்கூடாது என்றும் அவர்கள் அறிவுரை கூறியுள்ளனர்.

பலியானவர்களின் குடும்பங்களுக்கும், பலத்த காயமடைந்தவர்களுக்கும் கூடுதல் இழப்பீடு வழங்குவதற்கு தமிழக அரசு பரீசிலிக்க வேண்டும் என்றும் தனியார் நிறுவனம் ஒன்றுக்காக இப்படியான துப்பாக்கிச்சூட்டு நிகழ்வுகளை அரசுத் துறைகள் நடத்தக்கூடாது என்றும் தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஜனநாயகத்தின் மீது விழுந்த வடு, என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணை 6 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# நீட் சட்டப் பிரேரணை தமிழகத்தில் நிறைவேற்றம்

## அ.தி.மு.க. ஆதரவு; பா.ஜ.க. வெளிநடப்பு

நீட் தேர்வின் பாதிப்புகள் குறித்து தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்து அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பேரவையில் நேற்றுக் காலை நீட் தேர்வுக்கு நிரந்தர விலக்கு பெறும் சட்ட பிரேரணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார்.



இந்த பிரேரணையின் மீதான விவாதம் நேற்றுப் பிற்பகலில் நடைபெற்றது. அப்போதுபிரேரணைக்குஆதரவுதெரிவித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் நன்றி தெரிவித்தார். இதற்கிடையே, நீட் தேர்வால் பல நன்மைகள் இருக்கின்றன என உரையாற்றிய பா.ஜ.கவின் நயினார் நாகேந்திரன், தமது கூட்டணிக்கட்சிகளுக்கும் தங்களுக்கும் நீட் தேர்வு தொடர்பாக வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன எனவும், அ.தி.மு.க.வின் கருத்துகளோடு தாங்கள் ஒத்துப்போகவில்லை என்பதையும் தெரிவித்து, நீட் தேர்வுக்கு நிரந்தர விலக்கு பெறும் சட்ட பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து பேரவையிலிருந்து ஏனைய பா.ஜ.கவின் உறுப்பினர்களோடு வெளிநடப்புச் செய்தார்.

இறுதியில், விவாதங்களின் பின்னர் தமிழக சட்டப்பேரவையில் நீட் விலக்கு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர்களுக்கான அனுமதியை வழங்கும் வகையிலான சட்ட பிரேரணையும் நிறைவேறியது.



# தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நிறைவு ஒரே நாளில் 20 பிரேரணைகள் நிறைவேற்றம்

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. தமிழக சட்டப்பேரவையில் 2021-22 ஆம் காலப்பகுதிக்கான நிதிநிலை அறிக்கை கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்டது. நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்.

இதையடுத்து, நிதிநிலை அறிக்கை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதம் கடந்த 23 நாள்களாக நடைபெற்றது. இந்தக் காலப்பகுதியில் 30க்கும் மேற்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டத்தொடரின் கடைசி நாளான நேற்று மட்டும் 20 பிரேரணைகள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன. ஓகஸ்ட் 13ஆம் திகதி தொடங்கிய தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# அடுத்தடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களில் தே.மு.தி.க. மீண்டும் எழுச்சி பெறுமாம்



தமிழகத்தில் அடுத்தடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களில் தே.மு.தி.க. மீண்டும் எழுச்சி பெறும் என அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுபட்ட 9 மாவட்டங்களில் 2 கட்டங்களாக ஒக்டோபர் 6 மற்றும் 9 ஆகிய திகதிகளில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தே.மு.தி.கவின் 17 ஆம் ஆண்டு ஆரம்ப நாளை முன்னிட்டு கட்சித்தலைவர் விஜயகாந்த் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தே.மு.தி.க. ஆரம்பித்து 16 ஆண்டுகள் முடிவடைந்து 17 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தோல்வி என்பது சறுக்கல்தானே தவிர அது வீழ்ச்சி அல்ல. எனவே, வருகிற உள்ளாட்சித் தேர்தலிலும் அடுத்தடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களிலும் தே.மு.தி.கவின் பலத்தை நாம் அனைவருக்கும் நிச்சயமாக நிரூபிப்போம், எனவும் விஜயகாந்த் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அரியலூரில் நீட் தேர்வு எழுதிய மாணவி மனவுளைச்சலில் தூக்கிட்டுத் தற்கொலை



மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வான 'நீட்' இந்தியா முழுவதும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இம்முறை நீட் தேர்வில் 16 லட்சம் பேர் தோற்றியிருந்தனர். தமிழ்நாட்டில், 18 நகரங்களில் 224 தேர்வு மையங்களில் நீட் தேர்வு நடைபெற்றது. இதில் ஒரு லட்சத்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினர்.

இதற்கிடையில், நீட் தேர்வில் தோல்வியடைந்துவிடுவோம் என நினைத்து சில மாணவ, மாணவிகள் தற்கொலை என்ற தவறான முடிவை எடுத்து வருகின்றனர் என செய்திகள் வெளியாகின்றன.

நீட் தேர்வுக்குத் தோற்றிய தமிழகத்தின் அரியலூர் மாவட்டம் துளாரங்குறிச்சியைச் சேர்ந்த கனிமொழி என்ற மாணவி இன்று வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. நீட் தேர்வினை எழுதிய தினம் முதல் குறித்த மாணவி மிகுந்த மன உளைச்சலில் இருந்துள்ளார் என்றும், தேர்வில் தோல்வியடைந்துவிடுவோமோ, என்ற எண்ணத்தால் மிகுந்த மன உளைச்சலில் இருந்த மாணவி கனிமொழி, தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

தற்கொலை செய்துகொண்ட மாணவி கனிமொழி 12 ஆம் வகுப்பில் 600 க்கு 562 மதிப்பெண் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக, சேலம் மாவட்டம் கூழையூரைச் சேர்ந்த விவசாயியான சிவக்குமார் என்பவரின் இரண்டாவது மகனான தனுஷ், ஏற்கனவே இரண்டு முறை 'நீட்' தேர்வு எழுதித் தேர்ச்சி அடையாத நிலையில், இந்த முறை பரீட்சையை எதிர்கொள்ள அச்சப்பட்டு தேர்வு நடைபெற்ற ஞாயிற்றுக்கிழமையன்று தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.



# கூட்டமைப்பிலுள்ள குழப்பங்கள் தொடர்பில் 18 இல் ரெலோ மத்திய குழு கூடி ஆராய்வு

தமிழ்த் தேசிய பரப்பில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு ஏற்படவுள்ளதாக வெளியாகின்ற கருத்துகள் தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவித்த ரெலோ செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), இது தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதியன்று, மத்திய குழு கூடி ஆராயவிருப்பதாகவும் கூறினார்.

தமிழ் மக்கள் மத்தியிலும் அரசியல் பரப்பிலும் ஏற்பட்டுள்ள தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசியப் பரப்பிலிருந்து பல முனைகளிலும் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன எனவும் இருந்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினாலும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளினாலும் எழுதப்பட்ட கடிதங்களில் பல குழப்பங்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றன எனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்துவிட்டது என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவடையாது என்றும் கருத்துகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு கட்சியினரை ஒரு கட்சியினர் வசைபாடிக் கொண்டும் இருக்கின்றனர் எனவும், ஜனா சாடினார்.

இந்நிலையில், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழுக் கூட்டம், மெய்நிகர் வழியாக, 11ஆம் திகதியன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இவ்விடயம் தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டு, இந்தக் குழப்பத்துக்கு முடிவுகாண்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதற்கமைய, இது சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு, எதிர்வரும் 18ஆம் திகதியன்று, மெய்நிகர் வழியாகக் கூடி தீர்க்கமான முடிவொன்றை எடுக்க இருக்கிறது எனவும், அவர் தெரிவித்தார்



# கிண்ணியாவில் சேதனப் பசளை மூலமாக மிளகாய், கறிமிளகாய் அமோக விளைச்சல்

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வட்டமடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய் ,கறி மிளகாய் அமோக விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளதாக செய்கையாளர் தெரிவித்தார்.

சேதனப் பசளையினை பயன்படுத்தி சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பரப்பில் குறித்த பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசன நவீன முறை மூலமாக நீர் விரயமாவதை தடுத்து இச் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த தனி நபரான சமீம் என்பவரே இப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளார். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.அனீஸ் அவர்களின் ஆலோசனைகளை பெற்று பாரிய விளைச்சலினை பெற்றுள்ளதாக விவசாயி இதன் போது தெரிவித்தார்.

இரு ஏக்கரில் கால் ஏக்கர் பகுதியில் மாத்திரம் சுமார் 1,000 கிலோ கிராம் கறி மிளகாய் மிளகாய் அறுவடை செய்து தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு அனுப்பி வருமானமீட்டியதாகவும் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் இப் பகுதியில் பல ஏக்கர் நிலங்களில் இவ்வாறான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டால் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதார முன்னேற்றங்களையும் கண்டு கொள்ள முடியும் எனவும் இச் செய்கை மூலம் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா இலாபமாக மீட்டலாம் என எதிர்பார்ப்பதாகவும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அனீஸ் மேலும் தெரிவித்தார்.

# அறுவடை செய்த வயல்களுக்கு இனந்தெரியாதோர் தீ மூட்டல்

திருகோணமலை – கந்தளாய், பேராற்றுவெளி பகுதியில், நேற்று காலை, அறுவடை செய்த வயல் நிலங்களுக்கு, இனந்தெரியாதோர் தீ மூட்டியுள்ளனர். இதனால், அந்தப் பகுதி, புகை மண்டலமாக காணப்படுவதோடு, திருகோணமலை – கொழும்பு பிர தான வீதியில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். அத்துடன், அப்பகுதியில் உள்ள வீடுகளில் இருக்கும் சிறுவர்களும் கைக்குழந்தைகளை வைத்திருப்போரும் சிரமப்படுகிறோம் எனவும் தெரிவிக்கின்றனர்.



# வீதிகளில் நடமாடியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது அன்டிஜன்

மட்டக்களப்பு நகரில் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடியவர்கள் கடைகளை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை நேற்று பொலிஸார். பொதுச் சுகாதார அதிகாரிகள் சுற்றிவளைத்து பஸ்வண்டியில் ஏற்றிச் சென்று அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளது.



மட்டு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கோட்டமுனை சுகாதார பிரிவிலுள்ள கூளாவடி, பார்வீதி போன்ற பிரதேசங்களில் இந்த சோதனை நடவடிக்கையை பொலிஸார். பொதுச் சுகாதார அதிகாரிகள் முன்னெடுத்தனர். இதன்போது கடைகளை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டோரையும் வீதிகளில் தேவையின்றி நடமாடியவர்கள் நூறு பேர்வரையில் பிடித்து பொலிஸ் பஸ்வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்று பார்வீதியில் அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதில் நூறுபேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி கண்டறியப்பட்டதையடுத்து அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

அதேவேளை மாவட்டத்தில் டெல்டா வைரஸ் அதிகரித்திருக்கும் நிலையில் பொதுமக்கள் ஊரடங்குச் சட்டத்தை மீறி அதிகளவில் நாளாந்தம் நடமாடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவுக்கு மணல் ஏற்றுமதி அரசாங்கப் பணியகம் ஒப்புதல்

மாலைதீவில் புதிய தீவு ஒன்றை நிரப்புவதற்காக இலங்கையில் இருந்து மணல் ஏற்றுமதி செய்யப்படவில்லை ஆனால் மாலைதீவில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை நிறுவனம் ஒன்றுக்கு தேவையான வர்த்தக ரீதியிலான மணல் தொகை மாத்திரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் சஜ்ஜன டி சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அதேநேரம், குறித்த மணலானது குழாய் இணைப்பு மற்றும் நீர்நிலைகளை நிரப்புவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

அதற்காக 8 க்யுப் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில், க்யுப் ஒன்றுக்கு 180,000 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்பட்டுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்க பணியகம் குறிப்பிட்டுள்ளது.










# ஐ.எஸ்.எல். கால்பந்தாட்டத் தொடர் நவம்பர் 19 இல் ஆரம்பமாகிறது

11 அணிகள் பங்குபெறும் எட்டாவது இந்தியன் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்தாட்டத் தொடருக்கான முதல் கட்டப் போட்டி அட்டவணையை போட்டி அமைப்புக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். கோவாவில் உள்ள 3 மைதானங்களில் இந்த போட்டித் தொடர் நடைபெற வுள்ளது. முதலாவது போட்டி நவம்பர் 19 ஆம் திகதி தொடங்குகிறது. ஆரம்ப லீக் ஆட்டத்தில் ஏ.டி.கே. மோகன் பகான் - கேரளா பிளாஸ்டர்ஸ் அணிகள் மோது கின்றன. மொத்தம் 115 ஆட்டங்களில் ஜனவரி 9 ஆம் திகதிவரையிலான 55 ஆட்டங்களுக்கான அட்டவணை மட்டும் எஞ்சிய போட்டிகளுக்கான அட்டவணை டிசெம்பர் மாதத்தில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமைகளில் மட்டும் 2 போட்டிகளும் ஏனைய தினங்களில் ஒரு போட்டியும் நடைபெறவுள்ளதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





## பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர்களாக மத்யூ ஹைடன், வெனொன் பிலன்டர் நியமனம்

வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் இடைக்கால பயிற்சியாளர்களாக மத்யூ ஹைடன், பிலன்டர் இருவரும் துடுப்பாட்டப் பயிற்சியாளராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மத்யூ ஹைடனும் பந்துவீச்சுப் பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் வெனொன் பிலன்டரும் நியமிக்கப்பட்டுள்ள மையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ரமீஸ் ராஜா உறுதிப்ப டுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர்களாக இயங்கி வந்த மிஸ்பா-உல்-ஹக் மற்றும் வக்கார் யூனிஸ் இருவரும் தங்கள் பதவியிலிருந்து அண்மையில் விலகியமையையடுத்து இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிகிறது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரையடுத்து அடுத்த சில வருடங்களுக்கான ஒப்பந்தம் செய்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்று ரமீஸ் ராஜாவை மேற்கோள்காட்டி பாகிஸ்தான் ஊடக மொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் 14 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்துள் ஹைடனதும், டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் மொத்தமாக 265 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பிலன்டரதும் அனுபவங்கள் பாகிஸ்தான் அணிக்குக் கைகொடுக்கும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதுவதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## சிம்பாப்வே வீரர் பிரெண்டன் டெய்லர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு




சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் பிரெண்டன் டெய்லர் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெறுகிறேன் என அறிவித்துள்ளார். அயர்லாந்து - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடரின் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என அவர் தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டிருந்த டுவிட்டர் பதிவில், தாய்நாட்டுக்காக நான் விளையாடும் இறுதிப் போட்டி இதுவாகும். இத்துடன் நான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன். கனத்த இதயத்துடன் இந்த முடிவை எடுத்துள்ளேன். கிரிக்கெட் எனக்கு எளிமையைக் கற்றுக்கொடுத்தது. அணியை நல்ல நிலையில் இருத்த வேண்டும் என்பதே என் இலட்சியமாக இருந்துள்ளது. 2004 இல் அணிக்குள் வரும்போது அந்த எண்ணத்தில்தான் இப்போது அதை நிறைவேற்றியதாகவே கருதுகிறேன். அத்துடன், இந்தப் பயணத்திற்காக எப்போதும் நன்றிக்குரியவனாக இருப்பேன். நன்றி. எனக் குறிப்பிட்டிருந்தார்.

தனது இறுதி சர்வதேசப் போட்டியில் நேற்று விளையாடிய பிரெண்டன் டெய்லர் 7 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தார். போட்டியில் சிம்பாப்வே அணியும் தோல்வியடைய அயர்லாந்து அணி தொடரரை 1-1 என்ற கணக்கில் சமன்செய்து கொண்டது.

சிம்பாப்வே அணியின் விக்கெட் காப்புத்துடுப்பாட்டவீரரான 35 வயதுடைய பிரெண்டன் டெய்லர், கடந்த 2004ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை மேற் கொண்டிருந்தார். 34 டெஸ்ட், 204 ஒருநாள் மற்றும் 45 ரி-20 போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 6,684 ஓட்டங்களைக் குவித்துள்ள அவர், ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்த சிம்பாப்வே வீரர்கள் வரிசையில் முதலிடத்தில் 6,786 உள்ள அண்டி பிளெவருக்கு அடுத்ததாக இரண்டாவதாக இடம்பிடித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் 11 சதங்களையடித்துள்ள இவர், அதிக சதங்களைப்பெற்றுக்கொண்ட சிம்பாப்வே வீரர் என்ற பெருமைக்குரியவர்.

2011-2014 காலப்பகுதியில் சிம்பாப்வே அணியின் தலைவராகச் செயல்பட்டிருந்த பிரெண்டன் டெய்லர், 2015 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுகிறேன் என திடீரென அறிவித்தார். அதன் பின்னர், கோல்பாக் ஒப்பந்தத்தின்படி இங்கிலாந்தின் நொட்டிங்ஹாம்யர் அணிக்காக விளையாடிய அவர், 2017 இல் சிம்பாப்வே அணியுடன் மீண்டும் இணைந்து கொண்டார்.

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக ரமீஸ் ராஜா நியமனம்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக முன்னாள் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளரான ரமீஸ் ராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இந்தப் பதவியை மூன்று ஆண்டுகாலம் வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த இசான் மணியின் பதவிக்காலம் ஓகஸ்ட் 25 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. அவரது பதவிக் காலத்தை நீடிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகியும், அந்த நாட்டின் பிரதமருமான இம்ரான்கான் விரும்பியிருக்கவில்லை. இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக ரமீஸ் ராஜா என்ற செய்தி ஏற்கெனவே உத்தியோகப்பற்றற்ற முறையில் வெளியாகியிருந்தது.

முன்னாள் தலைவர் இசான் மணி, ரமீஸ் ராஜா இருவருடனுமான சந்திப்பையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக ரமீஸ் ராஜாவை நியமிக்கும்படி பிரதமர் இம்ரான் கான் முன்மொழிந்திருக்கிறார் என நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. முன்னதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக வாய்ப்புள்ளவர்களின் பட்டியலில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மஜித் கானின் பெயரும் இடம்பெற்றிருந்தது. ஆனால், மஜித் கான் பிரதமர் கானின் நெருங்கிய உறவினர் என்பதால் அவர் அப்பதவியை ஏற்க விரும்பவில்லை எனத் தெரிவித்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. அத்தோடு, ரமீஸ் ராஜாவுக்கு தனது ஆதரவை தெரிவிக்கிறேன் எனவும் மஜித் கான் குறிப்பிட்டார் எனவும் கூறப்படுகிறது.

# வலி. வடக்கில் காணிப் பதிவுகள் மேற்கொள்வதை உடன் நிறுத்துக!

## மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் குணபாலசிங்கம் வேண்டுகோள்

**வலிகாமம் வடக்கில் காணிப் பதிவுகள் மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறு வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் குணபாலசிங்கம் கோரியுள்ளார்.**

தற்போது இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 31 வருடங்களாக வலி. வடக்கில் இராணுவத்தினரின் வசம் உள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை. அரசால் இராணுவம் வசம் காணிகள் உள்ளவர்களைப் பதிவு செய்யுமாறு பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டு எமது மக்கள் அவ்வாறு பதிவுகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆனால், இன்று வரை எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை.

ஏற்கனவே இராணுவத்திடமிருந்து எமது காணியை மீட்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால், தற்போது வரை அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

தற்போதைய அரசாலும் ஒரு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இராணுவத்திடம் காணிகள் உள்ளோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

ஆனால், நாங்கள் அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு இனியும் விவரங்களை சேகரித்துக்கொண்டிருக்கவேண்டாம்.



ஏற்கனவே பொதுமக்களின் காணி விவரங்கள் தொடர்பில் இராணுவத் தளபதி மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது இந்தப் பதிவு நடைமுறையைச் சற்றுப் பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளுமாறு கூறுவதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

போர் முடிவடைந்த பின்னர் சில பகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால், பெருமளவு மக்கள் முகாம்களில் அகதிகளாக உள்ளார்கள். சிலர் வாடகைக்கு நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர். மக்கள் தம்மிடம் உள்ள காணி உரித்தின் அடிப்படையிலேயே தமது காணிகளைக் கோரி நிற்கின்றார்கள். எனவே, அரசு மக்களுக்குரிய காணிகளை விரைவில் விடுவிப்பு செய்யவேண்டும்.

மக்கள் கடந்த 30 வருடங்களாக பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். எனவே, பொதுமக்களின் நலன் சார்ந்து பொதுமக்களின் காணிகளை அரசு கையளிக்க வேண்டும் - என்றார்.

# கடை உரிமையாளர் மீது அடாவடிக்குழு தாக்குதல்

## வரணியில் சம்பவம்

யாழ்., தென்மராட்சி, வரணியில் கடை உரிமையாளர் ஒருவர் மீது இன்று தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலை 6 மணிக்கு வரணி இயற்றாலை பகுதியில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

பருத்தித்துறை வீதி, வரணியில் அமைந்துள்ள கடை ஒன்றின் உரிமையாளர் மீது கொட்டன் பொல்லுகளோடு வந்த 6 பேர் கொண்ட கும்பல் அத்துமீறி வீடு புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அத்துடன் அவரது தொலைபேசியையும் பறித்துக்கொண்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இதையடுத்து கடை உரிமையாளர் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார், தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளமையுடன் ஏனையோரை வலைவீசித் தேடி வருகின்றனர்.

# தோட்டக் காணிகளை சூறையாட சதிமுயற்சி

## மலையக மக்கள் முன்னணி சீற்றம்

பால் உற்பத்தி என்ற போர்வையில் எமது காணிகளை சூறையாட அரசு முயற்சி செய்து வருகின்றது. இதற்கு பின்புலத்தில் சூட்சுமமான முறையில் அரசில் இணைந்துள்ள மலையகக் கட்சிகளும் பச்சைக்கொடி காட்டி வருகின்றன.



இத்தனை நாள்களும் எமது சமூகம் மாடாக தேய்ந்து காடாக கிடந்த நிலத்தை செழிப்பு நிறைந்த பகுதியாக மாற்றியது.

இந்நிலையில், எம் நிலத்தை அரசு பால் உற்பத்தி என்ற போர்வையில் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்க இடமளிக்கக் கூடாது.

-இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எத்தனையோ ஆர்வமுள்ள இளைஞர்கள் கால்நடைளை வளர்க்க முயன்று கொண்டிருக்கின்றனர். கொரோனா கோரத் தாண்டவத்தால் பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களிடம் கடன் அடிப்படையிலோ அல்லது வேறெதாவது வழியிலேயோ பால் மாடுகளையோ அல்லது வேறு கால்நடைகளையோ வழங்கும் பட்சத்தில் எமது இளைஞர்களின் பொருளாதாரத்தையும் அதே நேரத்தில் பால் உற்பத்திகளையும் நாட்டில் அதிகரிக்க முடியும்.

நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் எமது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் போல் பால் உற்பத்தியிலும் பால் சார்ந்த பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்கும் முதுகெழும்பு சக்தியாகவும் எமது சமூகம் மாறும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

அதைவிடுத்து தனியாருக்கு நிலங்களையும் நிலம் சார்ந்த இயற்கை வளங்களையும் சேர்த்து தாரைவார்த்துக் கொடுக்க நினைக்கும் இந்த அரசையும் அதற்குத் துணை போகும் நமது சமூக அரசியல் பிரதிநிதிகளையும் மக்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும்.

எத்தனையோ தொழிற்சாலைகள் மூடுவிழா கண்டுள்ளன. அவ்வாறான தொழிற்சாலைகளை இனங்கண்டு பால் உற்பத்திக்கான வேலைத்திட்டங்களை ஆரம்பியுங்கள் அல்லது இதன் பொறுப்பை எமது இளைஞர்களிடம் ஒப்படையுங்கள் - என்றார்.

# இராணுவ பஸ் - ஓட்டோ மோதி விபத்து வவுனியா கொக்குவெளியில் நடந்தது






வவுனியா, தாண்டிக்குளம், கொக்குவெளி இராணுவ முகாம் முன்பாக ஓட்டோ - இராணுவ பஸ் மோதியதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவெளி இராணுவ முகாம் முன்பாக நேற்று இரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகரிலிருந்து ஏ9 வீதியூடாக பயணித்த இராணுவ பஸ் கொக்குவெளி இராணுவ முகாமிற்கு திரும்ப முற்பட்ட வேளை, எதிர்த்திசையில் வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஓட்டோச் சாரதி காயமடைந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற நிலையில் சிறிது நேரத்தில் இராணுவத்தினர் விபத்துக்குள்ளான இராணுவத்தின் பஸ்ஸை இராணுவ முகாமிற்குள் எடுத்துச்சென்றமையுடன் ஓட்டோவை வீதியோரத்தில் நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருந்தனர்.

விபத்தில் காயமடைந்த ஓட்டோச் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2021இல் வெளியிடப்பெற்றது.